பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**23 05 2026** **SATURDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு சட்டப்படி கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு விஜய் கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் மின் பற்றாக்குறை இல்லை என்று மின்துறை அமைச்சர் திரு நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

4. மதுரை, கோயம்புத்தூர், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. லாவோஸ் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Shah** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

. . . இனி விரிவான செய்திகள் . . .

<<<<<<>>>>>>>

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

காணொலி மூலம் 19வது வேலைவாய்ப்புத் திருவிழாவை தொடங்கிவைத்து பேசிய அவர், மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த அரசு வேலைவாய்ப்புகள் முக்கிய பங்காற்றுவதாக கூறினார்.

உலக நாடுகளுடன் இணைந்து இந்தியா செயல்படுவதாக கூறிய பிரதமர், இதன்மூலம் புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இவ்விழாவில், நாடு முழுவதும் 51 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டன.

<<<<<<>>>>>>>

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு சட்டப்படி கடுமையான தண்டனை வழங்கப்படும் என்று முதலமைச்சர் திரு விஜய் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கோயம்புத்தூரில் 10 வயது சிறுமிக்கு நிகழ்ந்த கொடூர சம்பவம் வேதனையையும், அதிர்ச்சியையும் அளிப்பதாக கூறியுள்ளார்.

வழக்கில் தொடர்புடைய இரண்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த சம்பவம் குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ள காவல்துறைக்கு உத்தரவிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

குழந்தையை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு தனது துயரத்தை அவர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, உயிரிழந்த சிறுமியின் குடும்பத்தினரை மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு சம்பத் குமார் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை பெற்றுத்தர அரசு உறுதியாக செயல்படும் என்றும், குற்றம் செய்பவர்களுக்கு சட்டத்தின் மீது பயம் இருக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

சிங்கப்பெண்கள் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும் திரு சம்பத் குமார் கூறினார்.

இந்நிலையில், கோவை சிறுமி பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் மீது

போக்சோ சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று மேற்கு மண்டல ஐ ஜி ரம்யா பாரதி தெரிவித்துள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், புகார் அளித்த **24** மணிநேரத்திற்குள் காவல்துறையினரின் துரித நடவடிக்கையால் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

இது குறித்து விரைவில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்று ஐ ஜி ரம்யா பாரதி தெரிவித்தார்.

<<<<<<>>>>>>>

அரசு மருத்துவமனைகளின் சேவைகளை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொண்டு தங்கள் ஆலோசனைகளை வழங்க வேண்டும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தரமான மருத்துவ சிகிச்சை மக்களுக்கு கிடைக்கும் என்பதை இந்த அரசு உறுதி செய்து வருவதாக கூறினார்.

தரமான சிகிச்சை அரசு மருத்துவமனைகளில் கிடைக்க செய்வது அரசின் லட்சியம் என்று அவர் தெரிவித்தார்.

தனியார் மருத்துவமனை தொடங்க வேண்டுமென்றால் உரிய மருத்துவச் சட்ட விதிமுறைகளின்படி அனுமதி பெற வேண்டும் என்றும் டாக்டர் அருண்ராஜ் கூறினார்.

<<<<<<>>>>>>>

வரும் கல்வியாண்டில் அரசு பள்ளி மாணவர்களுக்கு நலத்திட்டப் பொருட்களை வழங்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் உத்தரவிட்டுள்ளார்.

சென்னையில் மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ள பாடப்புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், சீருடைகள், புத்தகப் பைகள் உள்ளிட்ட பொருட்களை பள்ளிகளுக்கு விநியோகம் செய்யும் பணியினை அவர் நேரில் இன்று ஆய்வு செய்தார்.

அரசு பள்ளிகள் வரும் ஒன்றாம் தேதி திறக்கப்பட உள்ள நிலையில், மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ள நலத்திட்டப் பொருட்கள் மாவட்ட மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மையங்களிலிருந்து அரசு பள்ளிகளுக்கு நேரடியாக பொருட்கள் வழங்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

<<<<<<>>>>>>>

கல்வி நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள், பேருந்து நிலையங்கள் அருகே உள்ள டாஸ்மாக் கடைகளை மூட மாநில அரசு உத்தரவிட்டிருந்த நிலையில், இதுவரை 436 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டுள்ளதாக மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு விக்னேஷ் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், மொத்தம் 717 டாஸ்மாக் கடைகளை மூட அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மூடப்பட்ட கடைகளில் பணிபுரிந்துவந்த பணியாளர்களை அருகில் உள்ள டாஸ்மாக் கடைகளில் பணியமர்த்துமாறு அதிகாரிகளை அவர் அறிவுறுத்தினார்.

அனைத்து டாஸ்மாக் கடைகளும் இரவு 10 மணிக்கு மூடப்பட வேண்டும் என்றும், அதிக விலைக்கு விற்கும் கடை பணியாளர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார்.

<<<<<<>>>>>>>

மேகதாது அணை தொடர்பாக, கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று வேளாண்துறை அமைச்சர் திரு வினோத் தெரிவித்துள்ளார்.

கும்பகோணத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இவ்வாறு கூறினார்.

கர்நாடக துணை முதலமைச்சர் திரு டி கே சிவகுமார் தெரிவித்த கருத்து தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், ஒவ்வொருவரும் பல்வேறு கருத்துகளை கூறுவார்கள் என்றார்.

தவெக ஆட்சிக்கு வந்தால் விவசாயக் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று கூறப்பட்டிருப்பது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த அவர், இதுதொடர்பாக, முதலமைச்சர் அறிவிப்பை வெளியிடுவார் என்றார்.

<<<<<<>>>>>>>

தமிழகத்தில் மின் பற்றாக்குறை இல்லை என்று மின்துறை அமைச்சர் திரு நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பழைய மின்மாற்றிகளும், பழுதடைந்த மின் கம்பிகளுமே மின் தடைக்கு காரணம் என்று கூறினார்.

***(Sound Byte — நிர்மல்குமார் — 41 Sec. )***

<<<<<<>>>>>>>

தமிழகத்தின் மதுரை, நீலகிரி, கோயம்புத்தூர், திருச்சி உள்ளிட்ட **19** மாவட்டங்களின் ஒரிரு இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

**(*Sound Byte — வி ஆர் துரை - 46 Sec.* )**

<<<<<<>>>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாநில தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு முகமது பர்வேஸ் தலைமையில், அரசு உயர் அலுவலர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.

---------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வனத்துறை அமைச்சர் ஆர்.வி. ரஞ்சித் குமார் தலைமையில் மாவட்ட அலுவலர்களுக்கான ஆய்வு கூட்டம் இன்று நடைபெற்றது.

-----------------

தூத்துக்குடி மாவட்டத்தில் **136** கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய பல்நோக்கு மருத்துவமனையில் செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்து ஆட்சியர் திரு விஷூ மகாஜன் இன்று ஆய்வு செய்தார்.

--------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளி மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், பள்ளி வாகனங்களின் செயல்திறன் குறித்த சிறப்பு ஆய்வு நடைபெற்றது.

-----------------

சென்னையின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் தூய்மைப்பணி நடவடிக்கைகளை மாநகராட்சி ஆணையர் திரு சமீரன், இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

லாவோஸ் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Manush Shah** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

**ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 11-8, 4-11, 11-3, 11-13, 11-4 என்ற செட் கணக்கில், பிரான்சின் Thibault Poret-ஐ வென்றார்.**

**-------------------**

**ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று லக்னோ அணி - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.**

**லக்னோவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.**

**<<<<<<END>>>>>>>**